# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2025

## தனித்தேர்வர்களுக்கான தேர்வு நெறிமுறைகள் *

### 01. தேர்வு முறைகள்

வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் - 12 வரையான மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வுடன் புலன்மொழிவளத் தேர்வும் நடைபெறும். இரண்டு தேர்வுகளுக்கும் தோற்றும் நிலையிலேயே தமிழ்மொழிப் பொதுத்தேர்வு முழுமையடைகிறது.

**வளர்தமிழ் 1 தவிர்ந்த, ஏனைய வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அதற்கு முன்னைய வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

**புலன்மொழிவளத் தேர்வு :**

புலன்மொழிவளத் தேர்வு பின்வருமாறு அமையும்.

- வளர்தமிழ் - 1 தொடக்கம் 10 வரை : கேட்டல், பேசுதல், வாசித்தல்
- வளர்தமிழ் - 11, 12 : பேசுதல், வாசித்தல்.

**புலன்மொழிவளத் தேர்வு நாட்கள்**

- 03-05-2025 சனிக்கிழமை
- 04-05-2025 ஞாயிற்றுக்கிழமை
- 11-05-2025 ஞாயிற்றுக்கிழமை

விண்ணப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த மூன்று நாட்களில் ஏதாவது ஒரு நாள் புலன்மொழிவளத் தேர்விற்காக தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் ஒதுக்கப்படும்.

**ஒதுக்கப்பட்ட புலன்மொழிவளத் தேர்வு நாள், நேரம், இடம் என்பவற்றில் எதுவித மாற்றமும் செய்ய முடியாது.**

**எழுத்துத்தேர்வு : 07-06-2025 சனிக்கிழமை**

வளர்தமிழ் 1 தொடக்கம் 12 வரையான மாணவர்களுக்கு ஒரே நாளில் வேறுபட்ட நேரங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும். தேர்வு நேரம், இடம் தொடர்பான தகவல் உரியகாலத்தில் தேர்வு ஒப்புதல் அட்டையூடாக அறிவிக்கப்படும்.

### 02. விண்ணப்ப முடிவு நாள் : 19-01-2025

### 03. தேர்வுக் கட்டணம்

| | |
|---|---|
| வளர்தமிழ் 1 தொடக்கம் 4 வரை | **45 €** |
| வளர்தமிழ் 5 தொடக்கம் 12 வரை | **55 €** |

### 04. விண்ணப்பப் படிவத்தைப் பெறுதலும், நிரப்புதலும்

**04-அ. தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2024 இற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்திருந்தவர்களுக்கு :**

தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2024இல் சித்தியடைந்தவர்களுக்கு, அதற்கான சான்றிதழுடன் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2025 இற்கான விண்ணப்பப்படிவமும் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதேபோல், தேர்விற்குத் தோற்றத் தவறிய, சித்தியடையாத மாணவர்களுக்கும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2025 இற்கான விண்ணப்பப்படிவம் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தில் பெயர் மற்றும் தகவல்களைக் கவனமாகச் சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் சிவப்பு எழுதுகோலினால் திருத்தி, இம்முறை தோற்றவுள்ள வகுப்பினை உறுதிப்படுத்தி, கட்டணம் செலுத்தும் முறை பற்றிய தகவல்களையும் குறிப்பிட்டுக் கையொப்பங்களை இடுதல் வேண்டும்.

*** தவிர்க்கமுடியாத, அசாதாரண சூழ்நிலைகளால் மாற்றங்களுக்கு உட்படக்கூடும்** (ம.ப.பா) ➡

**04-ஆ. முதன்முறையாகத் தனித்தேர்வராக விண்ணப்பிப்பவர்களுக்கு :**

தேர்வு விண்ணப்பப்படிவத்தை எமது பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது **www.tamoulcholai.fr** என்ற எமது இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தேர்வு விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை **நீலம் அல்லது கறுப்பு எழுதுகோலினால் தெளிவாக,** நிரப்பி மாணவரின் அண்மைய ஒளிப்படத்தை ஒட்டி, மாணவரின் அகவையை உறுதிசெய்ய பிறப்புச் சான்றிதழ் அல்லது அடையாள ஆவணம் ஒன்றின் பிரதியையும் இணைத்தல் வேண்டும்.

## 05. விண்ணப்பங்களை அனுப்புதல்

விண்ணப்பங்களை எமது பணியகத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது அஞ்சலூடாகவும் அனுப்பலாம். நேரடியாக ஒப்படைப்பதாயின் பணியக நேரத்தினைக் கவனத்திற்கொள்ளவும். தேர்வுக்கட்டணத்தைக் காசாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம்.

அஞ்சலூடாக அனுப்புவதாயின் **TAMOULCHOLAI ASSOCIATION** எனும் பெயரில் கட்டளையிடப்பட்ட காசோலையினையும் **தங்கள் முகவரியிடப்பட்டுத் தபால் முத்திரை (20g) இணைக்கப்பட்டுள்ள கடிதவுறையினையும் இணைத்து** அனுப்பவும். அஞ்சலூடாக விண்ணப்பம் கிடைக்கப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு எம்மால் அனுப்பிவைக்கப்படும். **நெறிமுறைகளை நிறைவுசெய்யாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

## 06. தேர்வு ஒப்புதல் அட்டை

புலன்மொழி வளத்தேர்வு, எழுத்துத் தேர்வு ஆகியவற்றுக்கான தனித்தனி ஒப்புதல் அட்டைகள் **19-04-2025 இற்கு முன் கிடைக்கக் கூடிய வகையில்** அவரவர் முகவரிக்கு எம்மால் அனுப்பி வைக்கப்படும். **அஞ்சலூடான காலதாமதங்களுக்கும் தொலைந்துபோதல்களுக்கும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பொறுப்பேற்கமாட்டாது.** 19-04-2025 இற்குள் தேர்வு ஒப்புதல் அட்டை கிடைக்கவில்லையெனின், எமது பணியகத்தில் அதன் நகலைப்பெற்றுப் பயன்படுத்தமுடியும்.

## 07. தேர்வுக் குறிப்பேடு

தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்கு முதன்முறையாக விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்களுக்குரிய தேர்வுக் குறிப்பேட்டினை எமது பணியகத்தில் விண்ணப்பிக்கும் வேளையில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது புலன்மொழிவளத் தேர்வு மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம். இக்குறிப்பேட்டினை வளர்தமிழ் 12 தேர்வினை நிறைவுசெய்யும் வரை பாதுகாத்துப் பயன்படுத்துதல் வேண்டும். தேர்வுக் குறிப்பேட்டிற்கான கட்டணம் இரண்டு யூரோக்கள் (2€).

## 08. தேர்விற்கான சீருடை

தேர்வர்கள் தமிழ்ச்சோலைச் சீருடை (கறுப்புநிற நீளக்காற்சட்டையும் தனிவெள்ளை மேற்சட்டையும்) அணிந்திருத்தல் கட்டாயமாகும்.

## 09. தேர்வு மண்டப நடைமுறைகள்

புலன்மொழிவளத் தேர்விற்கு **30 மணித்துளிகள்** முன்னதாகவும், எழுத்துத் தேர்விற்கு **45 மணித்துளிகள்** முன்னதாகவும் தேர்வு ஒப்புதல் அட்டை மற்றும் தேர்வுக் குறிப்பேட்டுடன் மண்டபத்திற்கு வருகைதந்திருத்தல் வேண்டும்.

தேர்வுகள் தொடங்கி **30 மணித்துளிகளுக்கு மேல் தாமதமாக வரும் மாணவர்கள்** தேர்வு மண்டபத்தினுள் ஒப்புதலளிக்கப்படமாட்டார்கள்.

## 10. தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தல்

தேர்வுகள் யாவும் வளர்தமிழ் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், இறுவெட்டுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தற் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களை எமது இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யலாம். அல்லது எமது பணியகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## 11. தேர்வுப் பெறுபேறுகள்

தேர்வுப் பெறுபேறுகள் 31-08-2025 இற்கு முன் தங்களுக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும். இப்பெறுபேறு தொடர்பாக **'மீளாய்வு விண்ணப்பம்' [த.தே.-25-11(உ)]** எனும் படிவமூடாக 28-09-2025 இற்கு முன் மீளாய்விற்கு விண்ணப்பிக்க முடியும். மீளாய்வுக் கட்டணம் ஒரு மாணவருக்கு 30€. மீளாய்வுப் பெறுபேறு 31-10-2025 இற்கு முன் அனுப்பிவைக்கப்படும். மீளாய்வுப் பெறுபேற்றில் மாற்றம் இருப்பின் மீளாய்வுக் கட்டணம் மீளளிக்கப்படும்.

## 12. தேர்வுச் சான்றிதழ்கள்

தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள், தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2026 இற்கான விண்ணப்பப்படிவத்துடன் 11-12-2025 இற்கு முன் கிடைக்கக்கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும். தேர்வுக்குத் தோற்றத்தவறியவர்களுக்கும் சித்தியடையாதவர்களுக்கும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு-2026 இற்கான விண்ணப்பப்படிவம் மட்டும் அனுப்பிவைக்கப்படும்.

# தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2025

## புலன்மொழிவளத் தேர்வு தொடர்பான வழிகாட்டி

## கேட்டல் :

**வளர்தமிழ் 1 - 10 வரையான மாணவர்கள்** ஒலிக்கவிடப்படும் பகுதியைக்கேட்டு, அது தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

## பேசுதல் :

**வளர்தமிழ் 1, 2 :** படம் கொடுக்கப்பட்டு, அப்படத்திலிருந்து  ஐந்து வினாக்கள் கேட்கப்படும்.

**வளர்தமிழ் 3, 4, 5 : 'பேசுதல் 3-4-5'** நூலில் இருந்து, அந்தந்த வகுப்புகளுக்குரிய பத்துத் தலைப்புகளும் மாணவருக்கு தலைப்பு தெரியாதவாறு வைக்கப்படும். மாணவர், அத்தலைப்புகளில் மூன்றை எடுத்து, அதில் ஒன்றைத் தெரிவு செய்து, அது தொடர்பாக இரண்டு மணித்துளிகளில் பேசுதல் வேண்டும்.



| வளர்தமிழ் 3 | வளர்தமிழ் 4 | வளர்தமிழ் 5 |
|---|---|---|
| மயில் | செவ்வரத்தம் பூ | பனைமரம் |
| தென்னை | அம்மி, ஆட்டுக்கல், உரல் | இசைக்கருவிகள் |
| எறும்பு | கரும்பு | அஞ்சலகம் |
| கிளி | தேனீ | கங்காரு |
| கதிரவன் | நண்டு | உழவர் |
| காகம் | கோழி | கற்றாழை |
| பூங்கா | முருங்கை மரம் | இலைகள் |
| ஒட்டகம் | மாமரம் | வாழை |
| பூக்கள் | மாடு | மட்பாண்டம் |
| யானை | காய்கறிகள் | வேம்பு |

**வளர்தமிழ் 6, 7, 8, 9, 10 :**

ஒன்பது பாடநூல் தலைப்புகளும், ஒன்பது பொதுத் தலைப்புகளும் மாணவருக்கு தலைப்பு தெரியாதவாறு வைக்கப்படும். மாணவர் இருவகைத் தலைப்புகளிலும்  மும்மூன்றை எழுமாறாக எடுத்து, அவற்றில் விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்து, அது தொடர்பாக 2-3 மணித்துளிகள் பேசுதல் வேண்டும்.

| வளர்தமிழ் 6 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| மாமன்னன் எல்லாளன் | மூத்தோர் சொற்கேட்டல் |
| பாரிமகளிர் | அங்காடி |
| ஊக்கமும் உயர்ந்த உள்ளமும் | தமிழரின் மரபுவழி விளையாட்டுகள் |
| தமிழர் பண்பாடு | கோடைகாலம் |
| சுற்றுலா | தமிழ்மொழி |
| தமிழீழநாடும் விடுதலைப் போராட்டமும் | பறவைகள் |
| நாட்டுப்புறப்பாடல்கள் | பழங்களும் அவற்றின் பயன்களும் |
| கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை | ஆடிப்பிறப்பு |
| யாழ்ப்பாணத் தமிழரசு | நூலகம் |

| வளர்தமிழ் 7 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| கயிலைவன்னியன் | அன்பு செய்வோம் |
| நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் | செண்பகம் |
| இலக்கிய இன்பம் | தூய்மை பேணுவோம் |
| தமிழிசை | கடல்வாழ் உயிரிகள் |
| ஆறுவது சினம் | வீட்டுத் தோட்டம் |
| வீரஞ்செறிந்த வன்னி மண்ணும் தமிழரசுகளும் | உடற்பயிற்சியின் அகத்தியம் |
| தலையைக் காத்த தமிழ் | எமது பெற்றோர் |
| விபுலாநந்த அடிகள் | தைப்பொங்கல் |
| விருந்தோம்பல் | இலைதுளிர்காலம் |

| வளர்தமிழ் 8 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| பண்டாரவன்னியன் | நேரம் தவறாமை |
| தைப்பொங்கல் | கல்விச் செல்வம் |
| தமிழுக்குத் தந்த கனி | மரங்களும் சூழலும் |
| தமிழ் இலக்கிய வளம் | நீர் பார்த்து மகிழ்ந்த ஓர் இயற்கைக் காட்சி |
| காட்டு மல்லிகை | வாசிப்பின் பயன்கள் |
| காளமேகப் புலவர் | தமிழ்ப்பள்ளி ஆண்டுவிழா |
| அறநெறிச் செய்யுள்கள் | உழவுத் தொழில் |
| பாரதியின் புதுமைப் பெண் | ஒற்றுமையின் உயர்வு |
| இலங்கைத்தீவிலே தமிழர் ஆட்சியும் மாட்சியும் | தமிழர் கலைகள் |

| வளர்தமிழ் 9 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| இலங்கையின் முதற்குடிகள் | பிறருக்கு உதவுவோம் |
| மீண்டும் தொடங்கும் மிடுக்கு | ஒழுக்கத்தின் மேன்மை |
| சாகா வாழ்வு பெற்ற சங்கிலி மன்னன் | நாமும் எமது பண்பாடும் |
| தாயின் தாலாட்டு | நீர் விரும்பும் புலவர் |
| தமிழின் காவலர் தனிநாயகம் அடிகளார் | தொழில்நுட்ப வளர்ச்சியும் இளையோரும் |
| போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு | தாயக உணவுகளும் துரித உணவுகளும் |
| புலவரும் வறுமையும் | விடாமுயற்சி |
| அல்பேட் சுவைட்சர் | நட்பு |
| மகாவம்சம் வரலாற்று நூலல்ல | மலைவளம் |

| வளர்தமிழ் 10 | |
|---|---|
| **பாடநூல் தலைப்பு** | **பொதுத்தலைப்பு** |
| சேரமான் வஞ்சினம் | எமது தாயகம் |
| இயற்கை இன்பம் | அறிவியலும் (விஞ்ஞானமும்) தொழில்நுட்பமும் |
| தமிழர் இடப்பெயர்வும் புலப் பெயர்வும் | ஈகம் (தியாகம்) |
| கடல்கொண்ட தமிழகம் | வாழ்க்கை வழிகாட்டி திருக்குறள் |
| நடுகல் | தாய்நாட்டின் விடுதலை நோக்கிய செயற்பாட்டில் தமிழ் இளையோரின் பங்கு |
| வில்லுப்பாட்டு | இன்சொல் பேசுவோம் |
| இலங்கைத்தீவின் விடுதலையும் ஈழத்தமிழர் வாழ்வும் | ஆழிப்பேரலை (சுனாமி) |
| ஊடகங்களில் தமிழ் | முதியோரைப் பேணுவோம் |
| மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் | இன்றைய பொருளாதாரமும் நாமும் |


## வளர்தமிழ் 11, 12 :


மூன்று பாடநூல் தலைப்புகளும், மூன்று பொதுத் தலைப்புகளும் மாணவருக்கு உள்ளடக்கம் தெரியாதவாறு வைக்கப்படும். மாணவர் இருவகைத் தலைப்புகளிலும் ஒவ்வொன்றை எழுமாறாக எடுத்து, அவற்றில் விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்து, அது தொடர்பாகக் குறிப்பிட்ட நேரத்திற்குப் பேசுதல் வேண்டும்.

## வாசித்தல் :

**வளர்தமிழ்** 1 - 12 வரையான மாணவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் பகுதியை வாசித்துக் காட்டுதல் வேண்டும். **'வளர்தமிழ் 1-2-3-4 வாசிப்போம்'**, **'வளர்தமிழ் 5-6-7-8 வாசிப்போம்'**, **'வளர்தமிழ் 9-10-11-12 வாசிப்போம்'** ஆகிய நூல்கள் அந்தந்த வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்த உதவும்.








TAMOULCHOLAI ASSOCIATION

165 boulevard de la Villette, 75010 Paris.

09 84 06 38 83 tamoulcholai@yahoo.fr www.tamoulcholai.fr

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் – பிரான்சு

த.தே-2025-03(உ)

தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2025

## தனித்தேர்வர்களுக்கான தேர்வு விண்ணப்பம்

தெளிவாக, தனித்தனி எழுத்துகளால் நிரப்பவும். விண்ணப்ப முடிவுநாள் : 12-01-2025

| | | | |
|---|---|---|---|
| 1 | குடும்பப் பெயர் | | நிழற்படத்தை இங்கே ஒட்டவும். |
| | பெயர் | | |
| 2 | Nom en Français | | |
| | Prénom en Français | | |
| 3 | பிறந்த நாள் | நாள் / மாதம் / ஆண்டு | |
| 4 | பாலினம் | ஆண் / பெண் | |
| 5 | பிறந்த இடம் | | |
| 6 | முகவரி | Chez / Bat / Esc | |
| | | N° et Rue | |
| | | Code Postal / Ville | |
| 7 | தொலைபேசி-வீடு | | |
| | அலைபேசி | | |
| 8 | மின்னஞ்சல் | | |
| 9 | விண்ணப்பிக்கும் வகுப்பு | வளர்தமிழ் 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 | |
| 10 | முன்னர் தேர்விற்கு விண்ணப்பித்திருப்பின் | இறுதியாக விண்ணப்பித்த ஆண்டு | வகுப்பு |
| | | சுட்டெண்/கோவை எண் | பெறுபேறு |
| 11 | கட்டண முறை | காசு / காசோலை / வங்கியட்டை | |
| 12 | காசோலை எண் | | வங்கி |

மேற்படி தரவுகள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் எனவும், தேர்வு நெறிமுறைகளை நாம் அறிந்துள்ளதோடு அவற்றை ஏற்று நடப்போம் எனவும் உறுதியளிக்கிறோம்.

| | | |
|---|---|---|
| | | |
| **மாணவர் கையொப்பம்** | **நாள்** | **பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம்** |

## பணியகப் பாவனைக்கு மட்டும்

| | | | |
|---|---|---|---|
| பெற்றுக்கொண்டவர் | | பெற்றுக்கொண்ட தொகை | |
| நாள் | | சிட்டை எண் | |

குறிப்பு :


**TAMOULCHOLAI ASSOCIATION**

**165 boulevard de la Villette, 75010 Paris.**

**09 84 06 38 83** **tamoulcholai @yahoo.fr** **www.tamoulcholai.fr**

பணியக நேரம் : புதன் முதல் ஞாயிறு வரை 14.30 தொடக்கம் 19.30 வரை


**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்**